# பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை எதிர்ப்பதற்கான சட்டத் திருத்தம்

பகுதி III

## பெண் பிறப்புறுப்புச் சிதைவு

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

*நவம்பர் 2020*

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுயாதீனமான, பக்கச்-சார்பற்ற அமைப்பாகும். இது ஆட்சி மற்றும் மோதல் தீர்வு பற்றிய பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துகின்றது. பொதுக் கொள்கை தொடர்பான விவாதங்களைப் பலப்படுத்துவதற்கு சிவில் சமுதாயங்களின் முக்கிய பங்களிப்பு அவசியமாயுள்ளது என்ற திடமான நம்பிக்கையுடன் CPA 1996 இல் உருவாக்கப்பட்டது. பொதுக் கொள்கை விமர்சிக்கப்படுகின்ற, மாற்றுக் கொள்கைகள் அடையாளப்படுத்தப்பட்டு பகிரப்படுகின்ற ஆய்வு மற்றும் ஆதரித்து வாதாடுதல் நிகழ்ச்சித்திட்டங்களைச் செய்வதற்கு CPA உடன்பட்டுள்ளது.


இல.6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு- 5, இலங்கை.

தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386

தொலைநகல்: +9411 2081388

வலைத்தளம்: www.cpalanka.org

மின்னஞ்சல்: info@cpalanka.org

முகப்புத்தகம்: www.facebook.com/cpasl

டுவிட்டர்: @cpasl

# நன்றியுரை

இவ் அறிக்கையானது ஹின்ஷிரா பாலிக் மற்றும் குஷ்மிலா ரணசிங்க அவர்களினால் ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் வரைவுகளுக்கான கருத்துக் குறிப்புகள் கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து, பவானி பொன்சேகா, கியாதி விக்கிரமநாயக்க மற்றும் நிவேதா ஜெயசீலனினால் வழங்கப்பட்டது. இவ்வறிக்கையானது பசன் ஜயசிங்கவினால் செம்மைப்படுத்தப்பட்டதுடன் அயுத்யா கஜநாயக்கவினால் ஒருங்கமைக்கப்பட்டது. தகவல்கள் மற்றும் இது தொடர்பான அறிவினை எம்மோடு பகிரந்துக் கொண்ட எர்மிஸா டர்கலின் உதவிக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது நன்றியினைத் தெரவித்துக் கொள்கின்றது.

# உள்ளடக்கம்

நன்றியுரை ........................................................ 2

உள்ளடக்கம் ........................................................ 3

அறிமுகம் ........................................................ 4

பெண் பிறப்புறுப்பு சிதைவு ........................................................ 4

இலங்கையில் குபுஆ ........................................................ 6

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களின் கீழ் குபுஆ தண்டிக்கப்பட முடியுமா? ........................................................ 8

ஒப்பீட்டு நியாயாதிக்கங்களில் குபுஆ தொடர்பான சட்டங்கள் ........................................................ 11

ஐக்கிய இராச்சியம் ........................................................ 11

இந்தியா ........................................................ 14

ஏனைய நியாயாதிக்கங்கள் ........................................................ 15

விதந்துரைகள் ........................................................ 17

சட்டத் திருத்தங்கள் ........................................................ 18

கொள்கைத் திருத்தங்கள் ........................................................ 19

# அறிமுகம்

இலங்கையில் பெண் பிறப்புறுப்பு சிதைவு தொடர்பான சட்டத் திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ள பகுதிகள் தொடர்பாக இவ்வறிக்கை ஆராய்கின்றது. குற்றவியல் சட்டத்திலுள்ள இடைவெளியினை அடையாளப்படுத்துகின்ற குறிப்பான நோக்கத்துடன் இலங்கையில் பெண் பிறப்புறுப்பு சிதைவு நடைமுறையினைப் பகுப்பாய்வு செய்கின்ற ஒரு அறிக்கையாக இது அமைந்துள்ளது. எவ்வாறெனினும், இது ஒரு முழுமையானப் பகுப்பாய்வு கிடையாது. இவ் அறிக்கையானது பெண் பிறப்புறுப்பு சிதைவினைக் கையாள்வதற்கான சட்டத் திருத்தங்களையும் அச்சட்டத்திருத்தங்கள் வெற்றி பெறுவதற்கு துணைபுரிகின்ற கொள்கை விதந்துரைகளையும் முன்வைக்கின்றது.

இவ்வறிக்கையானது பாலியல் வன்முறையினை எதிர்ப்பதற்கான சட்டத் திருத்தங்களுக்கான விதந்துரைகளை வழங்குகின்ற கற்கைத் தொகுதிகளின் பகுதி III ஆகும். பகுதி I ஆனது திருத்தம் அவசியமாகின்ற நடைமுறையிலுள்ள சட்டங்களையும், இப்பகுதியில் சட்டத் திருத்தங்கள் மந்தமடைவதற்கான காரணங்களையும் ஆராய்ந்துள்ளது. பகுதி II மற்றும் IV ஆகியன முறையே நிகழ்நிலை பாலியல் வன்முறை மற்றும் திராவகத் தாக்குதல்கள் ஆகியவற்றை குற்றமாக்குவதற்கான குறிப்பான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை ஆராய்கின்றன.

## பெண் பிறப்புறுப்பு சிதைவு

பெண் பிறப்புறுப்பு வெட்டுதல் எனவும் அறியப்படுகின்ற பெண் பிறப்புறுப்பு சிதைவானது (FGM), *''மருத்துவமல்லாத காரணங்களுக்காக வெளிப்புற பெண் பிறப்புறுப்புக்களை பகுதியளவில் அல்லது முழுமையாக நீக்குவதனை அல்லது பெண் பிறப்புறுப்புக்களுக்கு ஏனைய காயங்களை ஏற்படுத்தலை உள்ளடக்குகின்ற அனைத்து செயன்முறைகளையும்'*[1] கொண்டமைந்ததாகும். FGM ஆனது பெண் பிள்ளைகள் மற்றும் பெண்களின் மனித உரிமை மீறலாக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் உலக சுகாதார ஸ்தாபனமானது இதனை நான்கு வகைகளாக வகைப்படுத்துகின்றது:[2]

- வகை I: சுமரிநீக்கம்- பெண்குறி மூலம் மற்றும் அல்லது பெண்குறி மூலத்தின் முன்னந்தோலினை பகுதியளவில் அல்லது முழுவதுமாக நீக்குதல்.
- வகை II: அப்புறப்படுத்தல்- பெண்குறி மூலம் மற்றும் பெண்குறிச் சிற்றிதழ்களை, பெண்குறி பேரிதழின் நீக்கத்துடனோ அல்லது நீக்கமின்றியோ பகுதியளவில் அல்லது முழுவதுமாக நீக்குதல்.
- வகை III: விழைச்சுக்கட்டு- பெண்குறி சிற்றிதழ் அல்லது பேரிதழை வெட்டி மீளப் பொருத்துவதனூடாக கொக்கியொன்றினை உருவாக்கி அதனூடாக யோனித் துவாரத்தினை குறுகியதாக்கல்.

---

[1] World Health Organisation,'Fact Sheet: Female genital mutilation', WHO Publications Geneva, January 2018, available at: https://www.who.int/en/news-room/fact-sheets/detail/female-genital-mutilation

[2] Ibid.

- வகை IV: ஏனையவை- மருத்துவ காரணமல்லாத விடயங்களுக்காக பெண்களின் பிறப்புறுப்பில் செய்யப்படுகின்ற ஊறு விளைவிக்கக்கூடிய செயன்முறைகள், உதாரணம்: உறுத்தல், துளையிடல், வெட்டுதல், கீறல் மற்றும் தீய்த்தல்

FGM இற்கு உட்படுகின்ற பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் நீண்டகால வலி மற்றும் பிள்ளைப்பேறின் போதான உயர் ஆபத்து உள்ளடங்கலான மற்றும் அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத நீண்ட-கால விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடிய உடல்சார்ந்த மற்றும் உளவியல் சுகாதாரம் சார்ந்த சிக்கல்களால் அவதியுறுகின்றனர்.[3] FGM இனால் எந்தவொரு மருத்து நன்மைகளும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதுடன் அந்நடைமுறையானது சமூகத்தில் நூற்றாண்டு காலமாக வேரூன்றியுள்ள மத மற்றும் கலாச்சார காரணங்களுக்காகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.[4] இந்நடைமுறையினை ஆதரிப்பவர்கள் இதற்கான பல்வேறு நியாயப்பாடுகளை முன்வைக்கின்றனர். இது பெண்மை குறித்து செய்யப்படவேண்டிய ஒரு சடங்காகும் அல்லது விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ள பெண்கள் நம்பிக்கை கேட்டிற்குரிய செயல்களில் ஈடுபடமாட்டார்கள், ஏனெனில் அவர்கள் அவர்களுடைய பாலியல் விருப்பங்களினால் கட்டுப்படுத்தப்பட மாட்டார்கள் என்பனவும் அந்நியாயப்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றன.[5] சில நாடுகள் FGM இனை ஒரு மதத் தேவைப்பாடு என்ற அடிப்படையில் நியாயப்படுத்த முயற்சிக்கின்றபோதிலும், இத்தகைய பல மதங்கள் உருவாவதற்கு முன்பிருந்தே FGM நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.[6]

இந்நடைமுறையின் தொடர்ச்சிக்கான அடிப்படையினை மத கோட்பாடுகளோ அல்லது நடைமுறைகளோ வழங்கவில்லை.[7] அது அதிகளவில் பெண் பிள்ளைகள் மற்றும் பெண்களின் உடல்கள் மற்றும் அவர்களின் பாலியல் தன்னுரிமையில் சமூகக் கட்டுப்பாட்டினை விதிப்பதனை நோக்கமாகக் கொண்டமைந்ததாகவே தோன்றுகின்றது.[8] FGM நடைமுறையானது பால்நிலைகளுக்கிடையிலான சமத்துவமின்மை வேரூன்றியுள்ளமையினையே எடுத்துக் காட்டுகின்றது என்பதுடன் இது பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தங்களது அடிப்படை உரிமைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை அனுபவிப்பதில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற வகையில் தலையீடுகளைச் செய்கின்றது.[9]

[3] World Health Organisation, 'Eliminating female genital mutilation: an interagency statement', 2008, pp. 1-39, available at: https://www.who.int/reproductivehealth/publications/fgm/9789241596442/en/
[4] Ibid.
[5] Ben Mathews, "Female genital mutilation: Australian law, policy and practical challenges for doctors' *Med J Aust* 2011; 194 (3) , available at: https://www.mja.com.au/journal/2011/194/3/female-genital-mutilation-australian-law-policy-and-practical-challenges-doctors
[6] The Law and FGM', Thomson Reuters Foundation, September 2018, 12 , available at: https://www.28toomany.org/static/media/uploads/Law%20Reports/the_law_and_fgm_v1_(september_2018).pdf
[7] Ibid, Ben Mathews, 'Female genital mutilation: Australian law, policy and practical challenges for doctors'.
[8] Ibid.

[9] 'Sources of international human rights law on Female Genital Mutilation' (UN Women), available at: https://www.who.int/reproductivehealth/publications/fgm/9789241596442/en/

## இலங்கையில் FGM

FGM நடைமுறையானது கலாச்சார ரீதியாக குறிப்பான குறிப்பீடுகளைக் கொண்டுள்ளது:[10] *'கத்னா'* மற்றும் *'சுன்னத்'* போன்ற சொற்பிரயோகங்கள் இலங்கைப் பின்னணியில் பயன்படுத்தப்படுகின்றன.[11] இலங்கையில் FGM ஆனது சமூக ஒப்பந்தத்தினால் பின்னிப்பிணைந்துள்ள பெண்களுடையத் தனிப்பட்ட வாழ்க்கையில்[12] இரகசியமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.[13] இந்நடைமுறை இலங்கையில் இரகசியமாக இடம்பெற்று வருகின்றமையினால் அதனை நேரடியாகக் கையாள்வதற்கான சட்டவாக்கமொன்று இலங்கையில் இல்லை. இலங்கையில் FGM இனைக் கையாள்வதற்கான சட்டம் மற்றும் கொள்கைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கானத் தேவையினை வேறுபட்ட பெண்கள் உரிமைகளுக்கானக் குழுக்கள் தொடர்ச்சியாக எழுப்பி வருகின்ற[14] அதே வேளை, அந்நடைமுறையினைத் தடுப்பதற்கான வினைத்திறனான செயற்பாடுகளெதுவும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

பகிரங்கப்பரப்பில் கிடைக்கக்கூடிய தேசிய மதிப்பீடுகளெதுவுமின்மையினால்,[15] இலங்கையில் தசாப்தங்களாக[16] FGM நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது[17] என்ற கருத்தினை நிரூபிப்பதற்காக வேறுபட்ட நிகழ்வுச் சான்றுகள்[18] பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வறிக்கைகள் இந்நடைமுறை இலங்கையில் மூர், மலாயா, தாவுடி போரா (Dawoodi Bohra) ஆகிய இனச் சமுதாயங்களிடையே இடம்பெற்று வருவதாகக் குறிப்பிடுகின்றன.[19] 2008 இல் அகில இலங்கை ஜமியாதுல் உலிமா இனால் வெளியிடப்பட்ட ∴பத்வாவில் (இஸ்லாமியத்தில் ∴பத்வா எனப்படுவது சட்டப் பரிந்துரையாகும்) FGM ஆனது கட்டாயமான மற்றும் பரிந்துரைக்கப்படுகின்ற நடைமுறையொன்றாகக் கருதப்பட்டது.[20] இவ்வுத்தரவிற்கான

---

[10] Hope Lewis, 'Between Irua and 'Female Genital Mutilation: Feminist Human Rights Discourse and the Cultural Divide' *Harvard Human Rights Journal* Volume 1, 1995, p. 5, available at: https://papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=1080248

[11] Zainab Ibrahim & Ermiza Tegal, *Towards Understanding Female Genital Cutting in Sri Lanka*, Family Planning Association of Sri Lanka, 2019, p. 7, available at: http://www.fpasrilanka.org/sites/default/files/towards_understanding_female_genital_cutting_in_sri_lanka.pdf

[12] Savitri Goonesekere, 'Harmful Traditional Practices in Three Countries of South Asia: culture, human rights and violence against women', *UNESCAP Gender and Development, 2012, Discussion Paper Series No. 21* available at: https://www.unescap.org/resources/harmful-traditional-practices-three-countries-south-asia-culture-human-rights-and-violence

[13] Kris Thomas, 'Conversations with a Circumciser: Female Genital Mutilation in Sri Lanka', *Roar Media*, February 27, 2020, https://roar.media/english/life/in-the-know/conversations-with-a-circumciser-female-genital-mutilation-sri-lanka

[14] In 2017, activist Shreen Saroor asked the Committee on Economic, Social and Cultural Rights to recommend that the state should criminalise FGM. See 'Sri Lanka should criminalize the practice of female genital cut, activist tells CESCR 61', *: Sri Lanka Brief,* July 9, 2017, available at: https://srilankabrief.org/2017/06/govt-should-criminalise-the-practice-of-female-genital-cut-in-sri-lanka-activists-tell-cescr-61/

[15] "Parliament MP and Public Health Specialist Sudarshani Fernandopulle was surprised that the practice occurred in Sri Lanka, and stated that there was a "dearth of studies and no public data" on its prevalence, as it is unregulated by law." See Aisha Nazim, "'Minor' snips: The long Lasting Effects Of Female Genital Cutting In Sri Lanka", *Roar Media,* January 10, 2018) , available at: https://roar.media/english/life/in-the-know/minor-snips-the-long-lasting-effects-of-female-genital-cutting-in-sri-lanka

[16] Zainab Ibrahim & Ermiza Tegal, 'FGM in Sri Lanka: it's never 'just a nick', *Al Jazeera*, December 25, 2017, available at: https://www.aljazeera.com/indepth/opinion/fgm-sri-lanka-nick-171218122855118.html

[17] Ibid, Thomas, 'Conversations with a Circumciser', *Roar Media.*

[18] Ibid, World Health Organisation, 'Eliminating female genital mutilation', p. 42.

[19] Ibid.

[20] Ibid. See also: Aanish Cuttilan, 'Female Circumcision, Genital Mutilation and the reality of an outdated Sri Lankan practice', *Pulse.lk,* September 26, 2018, available at: http://www.pulse.lk/everythingelse/female-circumcision-genital-mutilation-an-outdated-sri-lankan-practice/

காரணங்களாக மத நியாயப்படுத்தல்கள் அதே போல தூய்மை என்பன காணப்படுகின்றன.[21] எவ்வாறெனினும், இலங்கையிலுள்ள பிராந்தியங்களுக்கிடையே உள்ள சமுதாயங்களினுள் FGM தொடர்பாக வேறுபட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன என்பதுடன் சில மத குருக்கள் இதனை ஊக்குவிக்கின்ற அதே வேளை, வேறு சிலர் அதனை எதிர்க்கின்றனர்.[22]

இலங்கையிலுள்ள பெரும்பான்மையான FGM நடபடி முறைகள் சம்பிரதாயபூர்வமாக செய்யப்படுகின்றன என்பதுடன் அது எவ்வித மருத்துவ பயிற்சிகளும் அளிக்கப்பட்டிராத 'ஒஸ்தி மாமி' (நாவிதப் பெண்கள்)யின் தலைமுறையினரால் செய்யப்படுகின்றது[23] என்பதுடன் சில நடபடிமுறைகள் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத மருத்துவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.[24] இலங்கையிலுள்ள FGM ஆனது உலக சுகாதார ஸ்தாபகத்தினால் வரையறுக்கப்பட்டுள்ளதன்படி வகை I மற்றும் IV இனைச் சேர்ந்தவையாக உள்ளன (முறையே சுமரி நீக்கம் மற்றும் பெண் பிறப்புறுப்புக்கு செய்யப்படுகின்ற ஏனைய ஊறு விளைவிக்கத்தகு செயற்பாடுகள்).[25] வாய்மொழிச் சான்றுகளின் அடிப்படையில், பிறந்து நான்கு முதல் ஐந்து வாரமாகியுள்ள[26] சிசுக்கள்[27] அதே போல பதின்மவயதுப் பெண் பிள்ளைகள்[28] இந்நடைமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாய்மொழிச் சான்றுகள் FGM இற்கு உள்ளாக்கப்பட்டோரின் வலி மற்றும் அவ்வனுபவத்தின் வேதனை என்பனவற்றை விவரிக்கின்றன என்பதுடன் இதனால் ஏற்படக கூடிய நீண்டகால விளைவுகளாகிய உறவு முறைகளைத் தொடர்வதில் சிக்கல்களை எதிர்க்கொள்ளுதல் மற்றும் வயது வந்தவர்களென்ற ரீதியில் பாலியல் விருப்பம் குறைவாக உள்ளவர்களாகின்றமை என்பனவற்றையும் விவரிக்கின்றன.[29]

FGM நடைமுறையானது மிகப் பழமை வாய்ந்ததாகும். இது அது தொடர்பாகப் புரிந்துக் கொள்ள முடியாத அல்லது புரிந்து அதற்கான சம்மதத்தினை வழங்க முடியாத சிசுக்கள் மற்றும் சிறுவர்களுக்கும் செய்யப்படுகின்றமையினால், அது சிறுவர் துஷ்பிரயோகமொன்றாகிறது. ஆகவே, இந்நடைமுறையினை முடிவிற்கு கொண்டு வருவதனை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான சட்டங்களைக் கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாகும்.

---

[21] Ibrahim & Tegal, *Towards Understanding Female Genital Cutting in Sri Lanka*, p. 7.
[22] R Senanayake, 'Sri Lanka-Culture: Mothers Watch as Daughters are Circumcised', *Inter Press Service*, August 19, 1996, available at: http://www.ipsnews.net/1996/08/sri-lanka-culture-mothers-watch-as-daughters-are-circumcised/
[23] Vimukthi Fernando, 'Female Genital Mutilation: A lifetime of scarred agony', *Sunday Observer*, October 21, 2018, available at: http://www.sundayobserver.lk/2018/10/21/news-features/female-genital-mutilation-lifetime-scarred-agony
[24] Shreen Saroor, *Report of the Mannar Women's Development Federation for the Examination of the Fifth and Sixth Combined Periodic Reports of Sri Lanka*, 77th Session of the Committee on the Rights of the Child, December 2017, p. 4, available at: https://tbinternet.ohchr.org/Treaties/CRC/Shared%20Documents/LKA/INT_CRC_NGO_LKA_29835_E.pdf
[25] Ibid.
[26] ibid, Savitri Goonesekere, 'Harmful Traditional Practices in Three Countries of South Asia: culture, human rights and violence against women'.
[27] Ibid, R Senanayake, 'Sri Lanka-', *Inter Press Service.*
[28] Ibid

[29] Submission on the Practice of Female Genital Cutting (FGC) in Sri Lanka (October, 2017) 5

## இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களின் கீழ் FGM தண்டிக்கப்பட முடியுமா?

சுதேசிய சட்ட முறைமையினுள் உள்ள ஏற்பாடுகள் FGM இன் நடைமுறை தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட பிரயோகத்தினையே கொண்டுள்ளது. இலங்கையின் தண்டனைக் கோவையின்கீழ், சிறுவர்கள் தொடர்பில் செய்யப்படுகின்ற கொடூரச் செயல்கள்[30] மற்றும் பாரதூரமான ஊறு[31] போன்ற சம்பவங்களை உள்ளடக்கக்கூடிய வகையில் பொருட்கோடல் செய்யப்படலாம். 1998 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் பிரிவு 39 இன் கீழான 'சிறுவர் துஷ்பிரயோகத்தின்' அர்த்தத்திற்குள் உள்ளடக்கப்படக்கூடிய வகையில் FGM பொருட்கோடல் செய்யப்படலாம்.[32] பிள்ளைகளின் பாதுகாப்புடன் தொடர்புறுகின்ற விடயங்கள் தொடர்பாக கண்காணித்தல், ஆலோசனை வழங்கல், கலந்தாலோசித்தல் மற்றும் விதந்துரைகளை வழங்குதல் ஆகிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகள் FGM நடைமுறைக்கு எதிராகப் பயன்படுத்தப்பட முடியும்.[33]

உண்மையில், பல்வேறு பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களினால் தொகுக்கப்பட்ட FGM மீதான அறிக்கையானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பல்வேறு பாராளுமன்ற குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.[34] இவ் அறிக்கையானது இலங்கையில் FGM நடைமுறை தொடர்பான 15 தனிப்பட்ட வாய்மொழி அறிக்கைகளை உள்ளடக்கியிருந்தது.[35] அது FGM இனைத் தடுப்பதற்கான சட்டவாக்கத்தினை அறிமுகம் செய்வதன் மற்றும் அமுல்படுத்துவதன் முக்கியத்துவத்தினை அது குறிப்பிட்டிருந்தது என்பதுடன் FGM இன் நடைமுறை தொடர்பாக சமூகங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற முரண்பாடான அபிப்பிராயத் தெரிவிப்புக்கள் மற்றும் கூட்டுத் தீர்மானமெடுத்தலில் செல்வாக்கு செலுத்தவும் எண்ணியிருந்தது.[36]

அச்சமர்ப்பிப்பினைத் தொடர்ந்து, பெண்கள் மற்றும் பால்நிலை மீதான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவில் 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் FGM இற்கு உட்பட்டிருந்த பெண்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் பங்குபற்றுதலுடன் ஒரு இரகசியத்தன்மை மிகுந்த சந்திப்பொன்று இடம்பெற்றது. இக்குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்களின் விளைவாக சுகாதார சேவைகளுக்கான பணிப்பாளர் நாயகத்தினால் மருத்துவர்களுக்கு சுற்றுநிருபமொன்று வழங்கப்பட்டது, அச்சுற்றுநிருபமானது FGM அல்லது பெண் பிறப்புறுப்பினை

[30] "Whoever, having the custody, charge or care of any person under eighteen years of age, wilfully assaults, ill-treated, neglects, or abandons such person or causes or procures such person such person to be assaulted, ill-treated, neglected, or abandoned in a manner likely to cause him suffering or injury to health (including injury to, or loss of, sight of hearing, or limb or organ of the body or any mental derangement), commits the offence of cruelty to children." See section 308 A(1), Penal Code of Sri Lanka

[31] Ibid, section 311.

[32] பிள்ளைகள் மீதான கொடூரச் செயல்கள் தொடர்பான தண்டனைக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணான செயல்கள் அல்லது செய்யாமைகள் என்பன பொருட்கோடலுக்குள் உள்ளடக்கப்படும்.

[33] 1998 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் பிரிவு 14

[34] Ibid, Fernando, 'Female Genital Mutilation', *Sunday Observer*.

[35] Ibid, Cuttilan, 'Female Circumcision', *Pulse.lk*.

[36] Ibid, Saroor, *Report of the Mannar Women's Development Federation*, p. 13.

வெட்டுதல் போன்ற நடைமுறைகளில் ஈடுபடுவதனைத் தவிர்க்குமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தது.[37]

"*அச்செயன்முறையினைச் செய்தல் அல்லது அதனை ஊக்குவித்தல் உள்ளடங்கலாக அச்செயன்முறை மீதான எவ்வித ஈடுபாடும் உயர்ந்த அளவில் நெறிமுறை சாராத விடயமொன்றாகக் கருதப்படும் என்பதுடன் அனைத்து மருத்துவ தொழில்வாண்மையாளர்களும் பெண் பிறப்புறுப்பு சிதைவுச் செயற்பாட்டில் எவ்வித ஈடுபாட்டினையும் கொண்டிருப்பதிலிருந்து தம்மைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்*"[38] என்றும் மேலும், "*பெண் பிறப்புறுப்பு சிதைவினை செயற்படுத்துகின்ற அல்லது அதனை ஊக்குவிக்கின்ற மற்றும் குறிக்கப்பட்ட இவ்வறிவுறுத்தல்களினைப் பின்பற்றாத எந்தவொரு மருத்துவ தொழில்வாண்மையாளருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்*" என்றும் அச்சுற்றுநிருபம் கூறுகின்றது.[39]

எவ்வாறெனினும், இச்சுற்றுநிருபமானது குறிப்பிட்ட சில பழமைவாத முஸ்லிம் குழுக்களின் எதிர்ப்பினையும் சந்தித்திருந்தது.[40] ஆனால் இது முஸ்லிம் பெண்கள் மற்றும் உரிமைச் செயற்பாட்டாளர்களினால் முன்னேற்றமான திருத்தமொன்றென்றரீதியில் வரவேற்கப்பட்டது.[41] இந்நடைமுறை இலங்கையில் இருக்கின்றது என்பதனை அங்கீகரிப்பதற்கான முன்னேற்றகரமான படியொன்றாக இச்சுற்றுநிருபத்தின் அறிமுகம் அமைந்திருந்தது.[42]

எவ்வாறெனினும், FGM சந்தர்ப்பங்களைக் கையாள்வதற்கு தண்டனைக் கோவையின் ஏற்பாடுகள் போதுமானதல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கையில் அச்செயன்முறையினைப் பொதுவாகச் செய்கின்ற மருத்துவரீதியாகப் பயிற்றுவிக்கப்படாத 'ஒஸ்தி மாமி' சுகாதார அமைச்சினால் அளிக்கப்பட்டுள்ள இச்சுற்றுநிருபத்தின் பரப்பிற்கு அப்பாலேயே காணப்படுகின்றனர்[43], ஏனெனில் சுற்றுநிருபமானது மருத்துவ தொழில்வாண்மையாளர்களால் செய்யப்படுகின்ற FGM செயன்முறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. ஆகவே, இலங்கையில் FGM நடைமுறை தொடர்பாகவுள்ள விடயங்களைக் கையாள்வதற்கான வினைத்திறனான சட்ட மற்றும் நிறுவனப் பொறிமுறைகளை ஸ்தாபிப்பதற்கான தேவை உள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 12 இன் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சமத்துவத்திற்கான உரிமை மற்றும் பாரபட்சமின்மைக்கான உரிமை என்பவற்றின் மீறலொன்றாகவே FGM நடைமுறை காணப்படுகின்றது. மேலும், அரசானது பெண்களுக்கெதிரான

[37] Ibid, Fernando, 'Female Genital Mutilation', *Sunday Observer.*

[38] 'Health Ministry Circular against female circumcision comes under flack', *DailyFT*, July 11, 2018, available at: http://www.ft.lk/Healthcare/Health-Ministry-Circular-against-female-circumcision-comes-under-flack/45-658798

[39] Ibid.

[40] "Sri Lankan Islamic center condemns ban on female circumcision as 'affront'", *Reuters,*2018, available at: https://www.reuters.com/article/us-sri-lanka-women-fgm/sri-lankan-islamic-center-condemns-ban-on-female-circumcision-as-affront-idUSKBN1K12OZ

[41] A.H Sheriffdeen and Dr Ruvaiz Haniffa 'Right of Reply: female genital mutilation', *Daily Mirror,* 28th September 2018, available at: http://www.dailymirror.lk/article/Right-of-Reply-female-genital-mutilation-156101.html, Response to Female Circumcision: An Islamic practice brings untold benefits to women Ban FGM in Sri Lanka, *Daily Mirror*, 26 September 2018, available at: http://www.dailymirror.lk/article/Response-to-Female-Circumcision-An-Islamic-practice-brings-untold-benefits-to-women-Ban-FGM-in-Sri-Lanka-155992.html

[42] ibid, Ibrahim & Tegal, *Towards Understanding Female Genital Cutting in Sri Lanka*, p. 8.

[43] See: Medical Practitioners, Pharmacists, Midwives and Nurses Ordinance, No. 26 of 1927, section 34.

அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் மற்றும் சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் ஆகிய சர்வதேச சமவாயங்களை முறையே 1981 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்று அங்கீகரித்துள்ளதென்பதுடன் இச்சமவாயங்களின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான குழுக்களினால் செய்யப்படுகின்ற பருவகால மீளாய்விற்கும் உட்பட்டதாக உள்ளது. இச் சர்வதேச ஆவணங்கள் தனிநபர்கள் அல்லது சமுதாயங்கள் மீதல்லாமல் அரச திறத்தவர்களின் மீதே திணிக்கின்ற இக்கடப்பாடுகளுடன் இணங்கிக் கொள்வதற்கான சுமையினை விதிக்கின்றது.[44] உதாரணமாக, CEDAW சமவாயத்தின் உறுப்புரை 2(f)[45] மற்றும் CRC சமவாயத்தின் உறுப்புரை 24(3)[46] என்பன பெண்களுக்கெதிரான பாரபட்சமான மற்றும் சிறுவர்களின் ஆரோக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்கின்ற வழக்காறுகள் மற்றும் சடங்குகளை மெருகூட்டுதல் அல்லது ஒழித்தல் வேண்டுமென்ற கடப்பாட்டினை அரச தரப்புக்களுக்கு வழங்குகின்றது. அதற்கமைய, அரசு மனித உரிமைகளுக்கான தனது அர்ப்பணிப்பினை நிலைநிறுத்திக் கொள்ளும்பொருட்டு பொருத்தமான சட்டம் மற்றும் கொள்கைகளை அறிமுகப்படுத்துகின்ற மற்றும் நடைமுறைப்படுத்துகின்ற பணியினை அரசு கொண்டுள்ளது.

2012 இல், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஏகமானதான ஒரு முக்கிய தீர்மானமொன்றை நிறைவேற்றியது, இத்தீர்மானமானது FGM நடைமுறையினை முடிவுறுத்துவதற்கான உறுதியான முயற்சிகளை முன்னெடுக்குமாறு சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.[47] 2015 இல், உலக சமுதாயமானது 'நிலையான அபிவிருத்தி இலக்குகளை' அமைத்துக் கொள்வதற்கு இணங்கிக் கொண்டன. இதில் இலக்கு 5 இன் கீழ், பால்நிலை சமத்துவத்தினை அடைந்து கொள்ளும்பொருட்டு, FGM உள்ளடங்கலாக ஊறுவிளைவிக்கத்தகு நடைமுறைகளை நீக்க வேண்டும் என்ற இலக்கும் உள்ளடக்கப்பட்டிருந்தது.[48] அப்போதிருந்து, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நியதிச்சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பினை இலங்கை ஸ்தாபித்திருந்தது.[49]

ஆகவே, இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச உரிமைக் கடப்பாடுகளை அங்கீகரித்துப் பார்க்கின்றபோது, இலங்கையில் FGM நடைமுறையினை குற்றமாக்குவதற்கான சட்டவாக்கமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான தேவை உள்ளது.[50] இச்சட்டவாக்கமானது குற்றத்தினை விரிவாகக் குறிப்பிட வேண்டுமென்பதுடன் அதற்கானத் தண்டனையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

---

[44] Anika Rahman and Nahid Toubia, *Female Genital Mutilation: A guide to laws and policies worldwide*, London: Zed Books, 2000, p. 44 .

[45] State parties undertake "to take all appropriate measures, including legislation, to modify or abolish existing laws, regulations, customs and practices which constitute discrimination against women."

[46] State parties undertake "to take all effective and appropriate measures with a view to abolishing traditional practices prejudicial to the health of children."

[47] UN Women, 'United Nations bans female genital mutilation', 2012, available at: https://www.unwomen.org/en/news/stories/2012/12/united-nations-bans-female-genital-mutilation

[48] United Nations, 'Goal 5: Achieve gender equality and empower all women and girls, available at: https://www.un.org/sustainabledevelopment/gender-equality/

[49] Ministry of Sustainable Development, Wildlife and Regional Development, 'Voluntary National Review on the Status of Implementing the Sustainable Development Goals', June 2018, available at: https://sustainabledevelopment.un.org/content/documents/19677FINAL_SriLankaVNR_Report_30Jun2018.pdf

[50] Ibid, Ibrahim & Tegal, 'FGM in Sri Lanka', *Al Jazeera*.

## ஒப்பீட்டு நியாயாதிக்கங்களில் FGM தொடர்பான சட்டங்கள்

உலகிலுள்ள பல நாடுகள் FGM தொடர்பான குறிப்பான சட்டவாக்கத்தினைக் கொண்டுள்ளன. இந்நாடுகள் இக்குற்றம் தொடர்பாக வெற்றிகரமாகத் தொடுப்பதற்கும் அதிகரித்தளவில் தூண்டப்பட்டு வருகின்றன. இப்பிரிவினது அத்தகைய சில நியாயாதிக்கங்களைப் பரிசீலனை செய்கின்றது என்பதுடன் அவற்றின் சட்ட அமைப்பினை விரிவாக ஆராய்கின்றது.

### ஐக்கிய இராச்சியம்

ஐக்கிய இராச்சியத்தில், குறிப்பான சட்டவாக்கமொன்றினால் FGM சட்ட முரணானதாக்கப்பட்டுள்ளது. 1985 ஆம் ஆண்டு பெண் விருத்தசேதனத் தடுப்புச் சட்டத்தினை அறிமுகப்படுத்தியதிலிருந்து இந்நடைமுறையானது குற்றவியல் குற்றமொன்றாக உள்ளது.[51] தற்போது, இந்நடைமுறையானது 2003 ஆம் ஆண்டு பெண் பிறப்புறுப்பு சிதைவுச் சட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்டுள்ளது.[52] 2015 ஆம் ஆண்டு பாரதூரக் குற்றங்கள் சட்டமானது[53] பின்னாளில் பெண் பிறப்புறுப்புச் சிதைவுச் சட்டத்தினைத் திருத்தி பெண் விருத்த சேதனத்திற்கான நியாயாதிக்கத்தினை ஆட்புலத்திற்கு அப்பால் விரிவுபடுத்துகின்ற ஏற்பாடொன்றினை உள்ளடக்கியது. இத்திருத்தமானது FGM இனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தாமை, FGM இலிருந்து பெண்பிள்ளையொருவரைப் பாதுகாக்கத் தவறுதலை குற்றமொன்றாக்குதல், FGM பாதுகாப்புக் கட்டளைகள் மற்றும் 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்கள் தொடர்பில் FGM செய்யப்பட்டுள்ளதாக தாம் அறிந்துள்ள சந்தர்ப்பங்களை பொலிஸ் நிலையத்திற்கு அறியப்படுத்த வேண்டுமென்ற கடமையினை சுகாதார மற்றும் சமூக பராமரிப்புப் பணியாளர்கள் மீது விதித்தல் ஆகியன தொடர்பான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.[54]

பெண் பிறப்புறுப்புச் சிதைவுச் சட்டத்தின் பிரிவு 1(1) ஆனது, 'பெண் பிறப்புறுப்புச் சிதைவு' என்ற குற்றத்தினை *'எவரேனுமொரு நபர் பெண்ணின் பெண்குறி சிற்றிதழ், பெண்குறி பேரிதழ் அல்லது சுமரிகளை முழுவதுமாகவோ அல்லது பகுதியளவிலோ நீக்கின், விழைச்சுக்கட்டின் அல்லது வேறுவகையில் சேதப்படுத்தின் அவர் குற்றமொன்றைப் புரிந்தவராவார்''* என வரைவிலக்கணப்படுத்துகின்றது.[55]

---

[51] Female Circumcision Act of 1985, available at: http://www.legislation.gov.uk/ukpga/1985/38/pdfs/ukpga_19850038_en.pdf

[52] Female Genital Mutilation Act of 2003, available at: http://www.legislation.gov.uk/ukpga/2003/31/contents

[53] Amended by section 70 of the Serious Crimes Act of 2015, available at: http://www.legislation.gov.uk/ukpga/2015/9/part/5/crossheading/female-genital-mutilation/enacted

[54] Serious Crimes Act of 2015., sections 70-75,

[55] FGM Act, section 1(1), available at: http://www.legislation.gov.uk/ukpga/2003/31/section/1

இவ்வரைவிலக்கணத்தில் 'நபரொருவர்' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது குறித்துக் கொள்ளப்பட வேண்டிய விடயமொன்றாகும், ஏனெனில் அதனூடாக இவ்வேற்பாடுகளானவை மருத்துவர்களால் செய்யப்படுகின்ற மற்றும் FGM இற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாததாகின்றது. இக்குற்றத்திற்கான விதிவிலக்குகள், உடல்சார் மற்றும் உள சுகாதார அடிப்படையில் செய்யப்படுகின்ற அவசியமான செயன்முறைகள் அல்லது குழந்தைப்பேறு அல்லது பிறப்புடன் தொடர்புடைய நோக்கங்களுக்காக பதிவு செய்யப்பட்ட மருத்துவர், குடும்பநல உத்தியோகஸ்தர் அல்லது மருத்துவராக அல்லது குடும்பநல உத்தியோகஸ்தராவதற்கான பயிற்சியினைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற நபரால் செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களை உள்ளடக்குகின்றது.[56] பெண்பிள்ளையொருவரின் உள சுகாதாரத்திற்கு சத்திரசிகிச்சையொன்று அவசியமா எனத் தீர்மானித்தலில், "அவள் அல்லது வேறு நபர் அச்சத்திரசிகிச்சை வழக்காறு அல்லது சடங்கின்படி தேவைப்படுகின்ற ஒன்று என நம்புதல் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றல்ல."[57] பெண் பிள்ளையொருவர் FGM செய்துக் கொள்வதற்கு உதவி புரிதலும் சட்டமுரணானதாகவே கருதப்படுகின்றது.[58]

ஐக்கிய இராச்சியத்தில் FGM இற்கான தண்டனையாக சிறைத்தண்டனை, தண்டப்பணம் அல்லது இரண்டும் அமைகின்றது.[59] 1985 ஆம் ஆண்டு பெண் விருத்தசேதனத் தடுப்புச் சட்டத்தின்கீழ், இதனை செய்வதற்கான உச்சபட்ச தண்டனை ஐந்து வருடங்களாகும். இது 2003 ஆம் ஆண்டு பெண் பிறப்புறுப்பு சிதைவுச் சட்டத்தின் கீழ் இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகியனவற்றிற்கு 14 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.[60]

பாரதூர குற்றங்கள் சட்டமானது 2003 ஆம் ஆண்டு சட்டத்திற்கு புதிய அட்டவணை 2 இனை அறிமுகப்படுத்தியுள்ளது என்பதுடன் அது FGM இனால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதற்கான அபாயத்தினைக் கொண்டுள்ளவர்களைப் பாதுகாப்பதற்கான FGM பாதுகாப்பு கட்டளைகளை வழங்குகின்றது.[61] பாதுகாப்புக் கட்டளையொன்றானது தடைகள், மட்டுப்பாடுகள், தேவைப்பாடுகள் மற்றும் அபாயத்திலுள்ளவர்களைப் பாதுகாப்பதற்கு பொருத்தமானது என நீதிமன்றம் கருதுகின்ற வேறு ஏதேனும் வாசகங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். FGM இற்கான அபாயத்திலுள்ளவர்கள் அல்லது அவ்வபாயத்தினைக் கொண்டிருந்தவர்கள், உள்ளூர் அதிகார சபை அல்லது வேறு எவரேனுமொரு நபர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் பாதுகாப்புக் கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன் அக்கட்டளையின் வாசகங்கள் ஐக்கிய இராச்சியத்திற்கு வெளியேயுள்ள நடத்தையினையும் கையாளக் கூடியது.[62] இப்பாதுகாப்புக் கட்டளையினை மீறுகின்றமையானது குற்ற வழக்கொன்று தொடரப்படக்கூடிய குற்றவியல் குற்றமொன்றாகும் என்பதுடன் ஐந்து வருட சிறைத்தண்டனை, தண்டப்பணம் அல்லது இரண்டிற்கும் உள்ளாக்கப்படுவர்.

[56] Ibid., section 1(2) and 1(3).
[57] Ibid., section 1(5).
[58] Ibid., section 2.
[59] Ibid., section 5(1) (a) & (b).
[60] Ibid., section 5,
[61] Serious Crimes Act, section 73.
[62] FGM Act, section 4.

*1985* ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய இராச்சியமானது FGM தொடர்பான முழுமையான சட்டங்களைக் கொண்டிருந்த போதிலும் கூட, FGM தொடர்பான அதன் முதலாவது வெற்றிகரமான வழக்குத்தொடர்வானது *2019* ஆம் ஆண்டிலேயே கொண்டு வரப்பட்டது.[63] *R v N* என்ற வழக்கில் (பெண் பிறப்புறுப்பு சிதைவு),[64] ஒரு தாய் தன்னுடைய 3-வயது மகளது பிறப்புறுப்பினை சிதைத்தமைக்காக *13* வருட சிறைத்தண்டனைக்கு ஆளாக்கப்பட்டார். FGM ஆனது சிறுவர் துஷ்பிரயோக வடிவமொன்றாக ஐக்கிய இராச்சிய சட்டங்களுக்கெதிராக நீண்ட காலமாக செய்யப்பட்டு வருகின்றது என்றும் அதனால் ஏற்படுகின்ற உடல்சார் பாதிப்புக்களுக்கு அப்பால் ஏற்படுகின்ற உளத் தாக்கங்கள் வாழ்நாள் முழுதும் பாதிக்கப்பட்டவரிடம் நிலைத்திருக்கும் என்று கூறியது.[65] இப்பிரசித்தமான வழக்கானது உலகெங்கிலுமுள்ள ஆதரித்து வாதாடுவோரால் வெகுவாக வரவேற்கப்பட்டது.[66]

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான சந்தர்ப்பங்களில் மாத்திரமே தண்டனை வழங்கப்பட்டிருந்தமைக்கான பிரதான காரணம் யாதெனில், தண்டனையை உறுதிப்படுத்துவதற்கு போதுமான சான்றுகளைக் கண்டுபிடிப்பதில் விசாரணையாளர்களும் வழக்குத்தொடுனர்களும் எதிர்கொள்கின்ற சிக்கலாகும். பல பெண்பிள்ளைகள் FGM தொடர்பான சம்பவங்களைப் பதிவு செய்வதற்கு தயங்குகின்றார்கள், ஏனெனில் அவர்களுடைய பெற்றோர்கள் மீது வழக்குத் தொடரப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை.[67] மேலும், அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையானது, இனவாதம் மற்றும் கலாச்சார நடைமுறைகளை அவமதித்தல் போன்ற பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சத்தினால் சுகாதார பராமரிப்புத் தொழில்வாண்மையாளர்களும் ஆசிரியர்களும் FGM தொடர்பான சம்பவங்களை அறிக்கையிடுவதற்குப் பயப்படுவதாகத் தெரிவிக்கின்றது.[68] சாட்சிகள் அங்கமொன்றாக இருக்கின்ற சமூகம் இந்நடைமுறையினை அனுமதிக்கின்றமையினால் மற்றும் அதனை ஏற்றுக்கொள்ளாதவர்களைப் புறக்கணிப்பதனால் அல்லது அவ்வாறு அனுமதிக்கின்றவர்கள் நண்பர்களாக அல்லது குடும்ப உறுப்பினர்களாக இருப்பதனால் சாட்சிகளும் இது தொடர்பாக முன்வருவதற்குப் பயப்படுகின்றனர்.[69] ஆகவே, சட்டவாக்கமானது தனித்திருந்து FGM இனை ஒழிக்க முடியாது, மாறாக, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான மற்றும் வழக்குத்தொடர்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான பொறிமுறைகள் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

---

63 'FGM: Mother guilty of genital mutilation of daughter', *BBC*, February 1, 2019, available at: https://www.bbc.com/news/uk-england-47094707

64 *R v N (Female Genital Mutilation)*, available at: https://www.judiciary.uk/wp-content/uploads/2019/03/r-v-n-female-genital-mutilation-sentencing-remarks-whipple-j.pdf

65 Ibid.

66 Mother of three- year-old is first person convicted of FGM in UK', *Guardian* February 1, 2019, available at: https://www.theguardian.com/society/2019/feb/01/fgm-mother-of-three-year-old-first-person-convicted-in-uk

67 Lucy Millburn, 'Why are the UK's Law Against FGM Not Working?', *Right Info*, available at: https://rightsinfo.org/why-uk-laws-fgm-not-working/

68 Anna Davis, 'Doctors, nurses and teachers 'still dear raising alarm over FGM', *Evening Standard*, April 27, 2018, available at: https://www.standard.co.uk/news/health/doctors-nurses-and-teachers-still-fear-raising-alarm-over-fgm-a3825156.html

69 Northern Ireland Human Rights Commission, 'Female Genital Mutilation in the United Kingdom, August 2016, available at: https://www.nihrc.org/uploads/publications/FGMinUK-15.08.2016.pdf

## இந்தியா

இந்தியாவில் FGM இனைக் கையாள்வதற்கான சட்டவாக்கம் இன்னமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்தியாவில் FGM ஆனது '*கட்னா*' அல்லது '*கப்ஸ்*' என குறிப்பிடப்படுகின்றது என்பதுடன் பொதுவாக போஹோரா சமூகத்தில் இடம்பெற்று வருகின்றது.[70] இலங்கையைப் போன்றே, இந்தியாவிலும் FGM இரகசியமாக இடம்பெறுவதனால் அதன் அளவுவீதம் தொடர்பில் அறியமுடிவதில்லை. கடந்த காலங்களில், இந்திய அரசாங்கமானது அந்நாட்டில் FGM இடம்பெறுகின்றது என்பதற்கான உத்தியோகபூர்வ தரவுகள் இல்லை என்ற நிலைப்பாட்டினைப் பேணி வந்தது.[71] இந்நடைமுறையானது பொதுவாக மருத்துவ ரீதியாகப் பயிற்றுவிக்கப்படாத குடும்பநல உத்தியோகஸ்தர்கள் மற்றும் சமுதாயத்திலுள்ள வயது முதிர்ந்த பெண்களினால் செய்யப்படுகின்றது.[72]

மே 2017 இல், FGM இற்கு தடைவிதிக்கும்படி கோரி இந்திய உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.[73] இம்மனு[74], தாவூதி போஹோரா சமுதாயத்தில் பெண்பிள்ளைகள் தொடர்பில் செய்யப்படுகின்ற இவ் FGM நடைமுறை தொடர்பாக குரானில் எவ்வித குறிப்பீடுகளும் இல்லையென்றும் மருத்துவ காரணமொன்றின்றி அது செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தது.[75] இந்நடைமுறையானது, இந்திய அரசியலமைப்பில் சட்டத்தின் முன்னிலையில் சமமாக இருப்பதற்கான உரிமையினைச் சொல்லுகின்ற உறுப்புரை 14 மற்றும் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தினை உறுதிப்படுத்துகின்ற உறுப்புரை 21 ஆகியவற்றை மீறுவதாக மனுவில் வாதிடப்பட்டிருந்தது. அத்தடையினை ஆதரித்து அல்லது தாவூதி போஹோரா சமுதாயத்தில் அது ஒரு முக்கிய மத சடங்காக உள்ளது என்ற அடிப்படையில் அதனை ஆதரித்து பல தலையீட்டு மனுக்கள் செய்யப்பட்டன.[76] 2018 ஜுலையில் இடம்பெற்ற மூன்று நீதிபதிகள் முன்னிலையிலான விளக்கத்தில், "பெண்களின் உடல் கௌரவம்' மீறப்பட முடியாதது என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், 2018 செப்ரம்பரில், இவ்வழக்கானது ஐந்து நீதிபதிகளைக் கொண்டுள்ள அரசியலமைப்பு குழாமுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.[77] அந்நடபடிமுறைகளின்போது, பிரதம நீதியரசர் அரசியலமைப்பானது ஒரு நபர் இன்னொரு நபருக்கு ஊறினை ஏற்படுத்துவதனை

---

[70] Amnesty International, 'Female Genital Mutilation in India', available at: https://amnesty.org.in/female-genital-mutilation-in-india/

[71] Rina Chandran, 'No evidence of FGM, India government tells court, appalling activists', *Reuters*, December 29, 2017, available at: https://www.reuters.com/article/us-india-women-religion/no-evidence-of-fgm-india-government-tells-court-appalling-activists-idUSKBN1EN0QB

[72] Somya Abrol, 'Yes, Female Genital Mutilation happens in India: here's everything you need to know', *India Today*, February 6, 2018, available at: https://www.indiatoday.in/lifestyle/people/story/female-genital-mutilation-india-clitoris-pleasure-muslim-bohra-community-1162510-2018-02-06

[73] *Sunita Tiwari vs. Union of India* [Writ Petition (Civil) No.286 of 2017]

[74] Petition available at: https://scobserver-production.s3.amazonaws.com/uploads/case_document/document_upload/411/FGM.pdf

[75] Ibid.

[76] 'Understanding the Supreme Court's latest judgement mentioning female genital cutting in India', *Sahiyo*, available at: https://sahiyo.com/2019/11/17/understanding-the-supreme-courts-latest-judgement-mentioning-female-genital-cutting-in-india/

[77] Krishnadas Rajagopal, 'SC refers plea against female genital mutilation to Constitutional Bench', *The Hindu*, September 24, 2018, available at: https://www.thehindu.com/news/national/sc-refers-pil-against-female-genital-mutilation-to-constitution-bench/article25026340.ece

அனுமதிக்கவில்லை என வாய்மொழி அவதானிப்பொன்றினை மேற்கொண்டிருந்தார் என்பதும் நீதிபதி சந்ரசுட் ஆனது பெண் பிள்ளைகள் மீது நிரந்தரமான, உணர்வு ரீதியான மற்றும் உளவியல் வடுக்களை ஏற்படுத்துகின்றது எனத் தெரிவித்தார்.[78]

2019 இல், கேரள சபரிமலை ஆலயம் தொடர்பான வழக்கில் மனுக்களை மீளாய்வு செய்வதற்கான விளக்கத்தின்போது இவ்வழக்கு சுட்டிக்காட்டப்பட்டது.[79] உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட நீதிபதி குழாமானது கோயில்களுக்கு பெண்கள் செல்வது தொடர்பான விவாதமானது நீதிமன்றத்தின் முன்னிலையில் நிலுவையிலுள்ள தாவூதி போஹோரா சமுதாயத்தில் செய்யப்படுகின்ற FGM நடைமுறை தொடர்பான வழக்கு உள்ளடங்கலாக பால்நிலை மற்றும் மத உரிமைகள் தொடர்பான ஏனைய வழக்குகளுடன் மேவியுள்ளது என குறிப்பிடப்பட்டது.[80] வேறுபட்ட சமுதாயங்களிலிருந்து பதிவு செய்யப்பட்டிருக்கும் வழக்குகளுக்கு தீர்ப்பளிப்பதற்கு முன்னால், இக்குழாமானது முதலில் அரசியலமைப்பிலுள்ள மதச் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமைகளை ஆளுகின்ற கோட்பாடுகளுக்கான பொருட்கோடல் தொடர்பில் தீர்ப்பளிக்க வேண்டும் என நீதிமன்றம் கூறியது.[81] இவ்வழக்கிற்கான விளக்கங்கள் பல தடவைகள் தாமதமடைந்தன என்பதுடன் 2020 நவம்பர் அளவிலும் இன்னும் கேட்கப்பட வேண்டியதாகவே உள்ளது.

## ஏனைய நியாயாதிக்கங்கள்

அவுஸ்திரேலியாவில், FGM இனைத் தடுப்பதற்கான குற்றவியல் சட்டவாக்கத்தினை அனைத்து மாநிலங்கள் மற்றும் ஆள்புலங்களும் நிறைவேற்றியுள்ளன.[82] அவுஸ்திரேலிய மேல் நீதிமன்றமானது முதல் தடவையாக 2019 இல் FGM தொடர்புறுகின்ற வழக்கொன்றினை வழக்காடல் செய்திருந்தது என்பதுடன் அது மூன்று தண்டனைகளுக்கு வழிவகுத்ததுடன் இந்நடைமுறை அனைத்து வடிவங்களிலும் தடை செய்யப்பட்டுள்ளது என்பது மீளுறுதிப்படுத்தப்பட்டது.[83]

---

[78] Ibid.

[79] 'Three other cases mentioned in Sabarimala Review', *Live Law,*, November 15, 2019, available at: https://www.livelaw.in/top-stories/three-other-cases-mentioned-in-sabarimala-review-order-149785

[80] 'Supreme Court refers Sabarimala temple issue to larger bench, no stay on women's entry', *India Today*, November 14, 2019, available at: https://www.indiatoday.in/india/story/sabarimala-verdict-supreme-court-refers-case-to-7-judge-bench-1618772-2019-11-14

[81] 'Female genital mutilation petition pending before Supreme Court', *Hindustan Times,* November 15, 2019, available at: https://www.hindustantimes.com/india-news/female-genital-mutilation-petition-pending-before-supreme-court/story-rsHGOLu0z5eEg3aZjHYEIL.html See also: Samanwaya Rautray, 'SC refers Sabarimala case to 7 judge bench, no stay on entry of women', *Economics Times*, November 14, 2019, available at: https://economictimes.indiatimes.com/news/politics-and-nation/sc-refers-sabarimala-case-to-a-larger-seven-judge-bench/articleshow/72049884.cms

[82] Attorney-General's Department, *Review of Australia's female genital mutilation legal framework: Final report*, Canberra: Attorney General's Department, 2013, available at http://www.ag.gov.au/Publications/Pages/ReviewofAustraliasFemaleGenitalMutilationlegalframework-FinalReportPublicationandforms.aspx

[83] Elizabeth Byrne, 'High Court rules female genital mutilation illegal in all forms, NSW court erred in quashing convictions', *ABC News*, October 16, 2019, available at: https://www.abc.net.au/news/2019-10-16/high-court-rules-female-genital-mutilation-illegal-in-all-forms/11606396

ஐக்கிய அமெரிக்காவில், FGM இனைக் குற்றமாக்குகின்ற சட்டத்தினை காங்கிரஸ் *1996* ஆம் ஆண்டு இயற்றியது.[84] அதற்கு *21* வருடங்களுக்குப் பின்னர், *2017* ஆம் ஆண்டே இது தொடர்பான குற்றத்திற்கான வழக்காடல் இடம்பெற்றது. இவ்வழக்கானது மருத்துவரொருவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது.[85] நீதித் திணைக்களமானது இவ்வழக்கினைத் தள்ளுபடி செய்ததுடன், சமஷ்டி FGM சட்டமொன்றினை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் காங்கிரஸிற்கு இல்லை என்பதனை உறுதிப்படுத்தியது,[86] இது விவாதங்களையும் விமர்சனங்களையும் தோற்றுவித்திருந்தது.[87] தற்போது, 'FGM இனை நிறுத்து' என்ற சட்டமூலமானது[88] அனுமதிக்காக House Judicial Committee இன் முன்னாலுள்ளது என்பதுடன் வாக்களிப்பிற்காக House of Representatives இற்கு அனுப்பப்படவுள்ளது.[89] *2020* ஆம் ஆண்டளவில், *50* சமஷ்டி மாநிலங்களில் *38* சட்டவாக்கத்தினூடாக FGM இனைக் குற்றமொன்றாக்கியிருந்தன.[90]

FGM உடன் தொடர்புடைய குற்றங்களுக்கான வெற்றிகரமான வழக்குத்தொடரல்களை செய்துள்ள முன்னணி உதாரணமாக பிரான்ஸ் இருந்து வருகின்றது[91], *1970* ஆம் ஆண்டிலிருந்து சுமார் *50* வழக்குகள் தொடர்பில் வழக்காடப்பட்டுள்ளன.[92] எவ்வாறெனினும், பிரான்ஸில் FGM இற்கு எதிரான குறிப்பான சட்டமெதுவும் இல்லை, குற்றவாளிகள் உடல் ஊறினை ஏற்படுத்தல், நிரந்தர பலவீனம் அல்லது சிதைவினை ஏற்படுத்தல் போன்ற தண்டனைக் கோவையின் பொதுவான ஏற்பாடுகளின்கீழ் தான் குற்றம் சாட்டப்படுகின்றார்கள்.[93] ஆபத்திலிருக்கின்ற நபரொருவருக்கு உதவத் தவறுதல் அல்லது உதவி செய்யாமையினையும் பிரான்ஸ் சட்டம் குற்றமாக்குகின்றது என்பதுடன் இதற்கு அதிகளவான தண்டப்பணம் அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். இது FGM நடந்துள்ள சந்தர்ப்பங்களில் அவசியமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அதனூடாக FGM

[84] 18 U.S. Code § 116.Female genital mutilation, available at: https://www.law.cornell.edu/uscode/text/18/116
[85] *United States v. Jumana Nagarwala et al.*, No. l 7-cr-20274 (E.D. Mich. Nov. 20, 2018), available at: https://www.justice.gov/oip/foia-library/osg-530d-letters/4_10_2019/download
85 [86] Ibid.
[87] Kate Ryan, 'U.S. government backs off case of female genital mutilation', *Reuters*, April 13, 2019, https://www.reuters.com/article/us-usa-womensrights-fgm/us-government-backs-off-case-of-female-genital-mutilation-idUSKCN1RO2LA. See also: 'US is moving backwards': female genital mutilation ruling a blow to girls at risk', *Guardian*, November 21, 2018, available at: https://www.theguardian.com/law/2018/nov/20/us-female-genital-mutilation-detroit-michigan-unconstitutional
[88] H.R. 6100: STOP FGM Act of 2020, available at: https://www.govtrack.us/congress/bills/116/hr6100/text
[89] Equality Now, 'FGM in the US', available at: https://www.equalitynow.org/fgm
[90] AHA Foundation, 'FGM Legislation by State', available at: https://www.theahafoundation.org/female-genital-mutilation/fgm-legislation-by-state/
[91] Kim Willsher, 'France's tough stance on female genital mutilation is working, say campaigners', *Guardian*, February 10, 2014, available at: https://www.theguardian.com/society/2014/feb/10/france-tough-stance-female-genital-mutilation-fgm
[92] Equipop Excision, parlons-en! & End FGM European Network, *Joint Shadow Report – France (END FGM)*, available at: https://rm.coe.int/equipop-excision-parlons-en-end-fgm-eu-joint-shadow-report-france/16807b41ab
[93] House of Commons Home Affairs Committee, 'Female genital mutilation: the case for a national action plan' Second report of session 2014-15, available at: https://publications.parliament.uk/pa/cm201415/cmselect/cmhaff/201/201.pdf

தொடர்பாக வழக்குத்தொடர்வதற்கும் வினைத்திறனான வழியொன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது.[94]

FGM ஆனது சர்வதேச நியாயாதிக்கங்களில் இரு வேறுபட்ட சட்ட அணுகுமுறைகளினூடாகக் கையாளப்பட்டுள்ளன என்பது நிரூபணமாகின்றது. அவையாவன: குறிப்பான சட்டவாக்கத்தினை அறிமுகம் செய்தல் அல்லது நடைமுறையிலுள்ள பொதுவான ஏற்பாடுகளைப் பயன்படுத்தல். எவ்வாறெனினும், தனியான ஒரு சட்டத்தின் அறிமுகம் மாத்திரம் அதன் நடைமுறையினை உத்தரவாதப்படுத்தாது என்பதற்கு ஐக்கிய அமெரிக்கா சான்று பகர்கின்றது. இந்நடைமுறையினை ஒழித்தல் என்ற இறுதி இலக்கினை அடைவதற்கு FGM தொடர்பில் வழக்குத்தொடர்வதற்கு நடைமுறையிலிருக்கின்ற ஏற்பாடுகளின் பாவனை போதுமற்றது என்பதும் நிரூபணமாகின்றது. இரண்டாவது அணுகுமுறையானது FGM இனை நடைமுறையிலுள்ள சட்டத்திற்குள் உள்ளடக்கும்பொருட்டு நீதிமன்றங்களின் விரிவானப் பொருட்கோடலில் தங்கியிருக்க வேண்டியேற்படும். மேற்கூறப்பட்டுள்ள ஒப்பீட்டு பகுப்பாய்வின்படி, FGM நடைமுறை இடம்பெறுகின்ற ஆனால் நிலையான முறையொன்றினால் கையாளப்படாத இடங்களில் அந்நடைமுறையினை ஒழிப்பதற்கு நியதிச்சட்ட வடிவிலான புதிய சட்டவாக்கம் மற்றும் அதனுடன் இணைகின்ற ஒரு கொள்கைக் கட்டமைப்பு என்பன அவசியமாகின்றன.

## விதந்துரைகள்

FGM நடைமுறை ஆனது குழந்தைகள் மற்றும் பெண்களுக்கெதிராகப் புரியப்படுகின்ற குற்றமொன்றாகும் என்பதனை ஏற்றுக் கொள்கின்ற உலகளாவிய போக்கு காணப்பட்டு வருகின்றது. வேறு பல நியாயாதிக்கங்களில் போஹோரா சமுதாயத் தலைவர்களினால் வழங்கப்பட்டுள்ளக் கடிதங்களில் FGM நடைமுறையானது குறிப்பிட்ட நியாயாதிக்கத்தின் சட்டத்திற்கு எதிரானதாக இருப்பின் அதனை நடைமுறைப்படுத்தக்கூடாது என்பது உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[95] பொருத்தமான குற்றவியல் சட்டவாக்கம், நிறைவேற்றப்படுமாயின், மற்றும் அதனுடன் ஒன்றிணைந்தவகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுமாயின், அது இந்நடைமுறை இலங்கையில் நிறுத்தப்படுவதற்கு வழிவகுக்கும். இலங்கை FGM நடைமுறையினை உள்ளூர், பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் அமுல்படுத்தப்படுகின்ற உறுதியான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினூடாகத் தடுக்க வேண்டியது தவிர்க்க முடியாத விடயமொன்றாகின்றது.

எவ்வாறெனினும், FGM இனை முற்றாக ஒழிப்பதற்கு, அந்நடைமுறையினால் பாதிக்கப்பட்டுள்ள சமுதாயங்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். சட்டவாக்கம் மற்றும்

---

[94] John Lichfield, 'The French way: a better approach to fighting FGM?', *Independent*, December 15, 2013, available at: https://www.independent.co.uk/news/world/europe/the-french-way-a-better-approach-to-fighting-fgm-9006369.html

[95] Saroor, Report of the Mannar Women's Development Federation, p. 21.

கொள்கை என்பன FGM இனைக் கையாள்வதற்கான சமுதாய மட்ட முயற்சிகளுடன் சேர்த்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அது திறந்தக் கலந்துரையாடல்களுக்கு வழிவகுக்க வேண்டுமென்பதுடன் பங்குரித்தாளர்களினை வலுப்படுத்த வேண்டும். இதனைக் குற்றமாக்குவதற்கான சட்டவாக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கு அப்பால், FGM நடைமுறையினால் பாதிக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு இந்நடைமுறையின் கலாச்சார மற்றும் சமூக வேரூன்றல்களை சவாலுக்குட்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். FGM தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவும் மரியாதையான, குற்றம்சாட்டுகின்ற வகையிலல்லாத மற்றும் கட்டுப்படுத்தாதவொரு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.[96]

கீழ்வரும் விதந்துரைகள் இவ்வனைத்து வெளியீடுகளையும் அடைவதற்கு உத்தேசித்துள்ளன:

## சட்டத் திருத்தங்கள்

- FGM எனும் குற்றத்தினைத் தடுக்கும்பொருட்டு முழுமையான சட்டவாக்கமொன்றினை நியதிச்சட்ட வடிவில் அறிமுகப்படுத்துதல், அது:

  a. FGM இற்கான முழுமையான வரைவிலக்கணமொன்றினை உள்ளடக்கியிருக்கும்.

  b. மருத்துவ தொழில்வாண்மையாளர்களிலிருந்து மருத்துவ ரீதியாக பயிற்றுவிக்கப்படாத 'ஒஸ்தி மாமி' வரையில் யாரால் FGM நடைமுறைப்படுத்தப்படினும் அதனைக் குற்றமாக்குதல்.

  c. பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களால் வலிதான மருத்துவ காரணங்களுக்காக செய்யப்படுகின்ற சத்திரசிகிச்சை உள்ளடங்கலாக விதிவிலக்குகளுக்கான முழுமையானப் பட்டியலொன்றை உள்ளடக்குதல்.

  d. மருத்துவ ரீதியாகத் தேவைப்படுத்தப்படுகின்ற பெண்ணுறுப்புடன் தொடர்புடைய சிகிச்சைகளைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள மருத்துவ தொழில்வாண்மையாளர்கள் யாரெனக் குறிப்பிடுதல்.

  e. FGM இனால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் FGM இனால் பாதிக்கப்படக்கூடிய அபாயத்திலுள்ளவர்களுக்கான பாதுகாப்பு கட்டளைகளை[97] வழங்குதல்.

- FGM குற்றத்திற்கெதிராக வழக்குத் தொடர்வதற்கான வழிகாட்டிகள் மற்றும் FGM உடன் தொடர்புடைய குற்றங்களுக்குத் தண்டனை அளிப்பதற்கான நீதிபதிகளுக்குரிய வழிகாட்டல்கள் என்பனவற்றை வெளியிடுதல்.

  a. வழிகாட்டிகளில் பாதிக்கப்பட்டவரின் அடையாளம் வெளிப்படுத்தப்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்துகின்ற நடவடிக்கைகளை உள்ளடக்குதல்.

---

[96] Ibrahim & Tegal, Towards Understanding Female Genital Cutting in Sri Lanka, p. 41.

[97] Similar to the Domestic Violence Act of Sri Lanka and as practised in the UK.

## கொள்கைத் திருத்தங்கள்

- FGM மற்றும் பெண்களுக்கு ஊறு ஏற்படுத்துகின்ற ஏனைய பாரம்பரிய நடைமுறைகளைப் பெண்களுக்கு எதிரான வன்முறையாக வரைவிலக்கணப்படுத்துகின்ற, பாலியல் மற்றும் பால்நிலை வன்முறையினைக் கையாள்வதற்கான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் தேசிய செயற்திட்டம் (2016-2020)[98] இனை அமுல்படுத்தல்.

- FGM நடைமுறையுடன் தொடர்புறுகின்ற களங்கத்தினைக் கையாளும்பொருட்டு, அந்நடைமுறையினால் பாதிக்கப்பட்டுள்ள சமுதாயங்களில் பொது விவாதங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். அவை:
  a. கூருணர்வுள்ள, குற்றம் சாட்டாத மற்றும் பாதுகாப்பான முறையில் FGM நடைமுறை தொடர்பாகக் கலந்துரையாட அனுமதித்தல்.

  b. சமுதாய பிரதிநிதிகள் அதே போல சுகாதார, சமூகப் பராமரிப்பு, கல்வி மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இவற்றை நடத்துதல்.

  c. FGM நடைமுறையின் சுகாதார விளைவுகள் பற்றிய மருத்துவ ரீதியாக நுட்பமான மற்றும் இலகுவாக வாசிக்கக்கூடிய தகவல்களை வருகைத் தருபவர்களுக்கு வழங்குதல்.

- FGM நடைமுறையினை எதிர்ப்பதில், தேசிய சிறுவர்ப் பாதுகாப்பு அதிகாரசபையின் வகிபாகம் மற்றும் சுயாதீனத்தன்மையினை மேம்படுத்தல்.

- பாலியல் கல்விக்கு மேலதிகமாக, FGM நடைமுறையினால் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு பற்றி பாடசாலைக் கல்வித் திட்டத்தில் உள்ளடக்கி அதனைக் கற்பித்தல்

- குறிப்பாக FGM நடைமுறையினைக் குற்றமாக்குகின்ற சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்பு, அதனைத் தடுப்பதற்கான பிரச்சாரங்களை மேற்கொள்கின்ற தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு அதிகளவான ஆதரவு மற்றும் நிதியுதவியினை வழங்குதல்.

- FGM நடைமுறையின் பிரயோகம் கண்டறியப்படுகின்றது மற்றும் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு, மருத்துவ தொழில்வாண்மையாளர்கள், சமுதாய சுகாதார பராமரிப்பாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளிடையே கல்வி மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

- நாட்டில் FGM நடைமுறையினை பின்தொடர்வதற்கான உறுதியான கண்காணிப்பு முறையொன்றினை உருவாக்குதல்

- பாதிக்கப்பட்டவர்களின் அடையாளம் வெளிப்படுத்தப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்கின்ற அதேவேளை, இந்நடைமுறை தொடர்பாகக் காலத்திற்கு காலம் ஆய்வு செய்து கண்டறியப்பட்டவைகளை வெளியிடுதல்.

[98] Ministry of Women and Child Affairs, 'Policy Framework and National Plan of Action to address Sexual and Gender-based Violence (SGBV) in Sri Lanka 2016-2020' June 2016, p. 16, available at: http://gbvforum.lk/r-library/document/SGBV%20National%20Action%20Plan.pdf